23.07.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண்.35/2025

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது ரசாக் | | |
| த/பெ | ரகுமான் சேட்டு | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | ஹோட்டலில் வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 32 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கமாலுதீன் மற்றும் அ.சா.2 சதாம் உசேன் ஆகியோரை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 04/08/2024 இரவு சுமார் 7.30 மணி அளவில், ஜானகிபுரம் அங்காளம்மன் கோயில் அருகில் நாங்கள் அனைவரும் ஒரு விசேஷத்திற்கு சென்று விட்டு வந்து தனியார் பேருந்தில் இறங்கினோம். அப்போது சதாம் உசேனும், கமாலுதீனும், பேருந்தில் இருந்து இறங்கி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது வீரப்பனும், சரவணனும் அங்கு வந்து ஊருக்குள் துலுக்க பசங்க யாரும் இருக்கக்கூடாது தேவிடியா மக்களே ஊரை விட்டு போங்கள் என்று திட்டி கத்தியாலும், பைப்பாலும் அடிக்க வந்தார்கள்,

வீரப்பனும், சரவணனும், கமாலுதீனையும், சதாம் உசேனையும் அடித்துவிட்டார்கள். அவர்கள் அடித்ததற்கு பிறகுதான் எங்களுக்கு விவரம் தெரியும். அங்கு வேறு யாராவது இருந்தார்களா என்றால் நாங்கள் குடும்பத்தோடு இருந்தோம். சம்பவம் நடந்ததற்கு பிறகு நான் கமாலுதீன் மற்றும் சதாம் உசேன் ஆகியோர்களை அழைத்துச் சென்று விழுப்புரம் அரசு மருத்துவமனையில் சேர்த்து விட்டு வீட்டிற்கு திரும்பினேன். இது சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

7.30 மணிக்கு சம்பவம் நடந்தது. 10 நிமிடத்தில் மருத்துவமனைக்கு கூப்பிட்டு சென்றார்கள். நாங்கள் குடும்பத்துடன் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனைக்கு கமாலுதீனும், சதாம் உசேனும், முன்கூட்டியே சென்று விட்டார்கள். நான் பின்னால்தான் சென்றேன். நான் போகும்போது அவர்களுக்கு சிகிச்சை கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்களா? என்றால் கொடுத்திருப்பார்கள் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் மருத்துவமனை வரை தான் சென்றேன். போலீசார் மறுநாள் காலையில் என்னை விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலேயே இல்லை என்றும், நான் அவர்களுக்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தமதாக ஏற்றுக்கொண்டார்.

**மறுவிசாரணை**

**இல்லை**